# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, பெப்புருவரி மாதம் 25 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 10.00***

**2011 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்**

*[2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஓ. (கூட்டி) 9/2010*

**தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*"தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பு" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒழுங்கமைப்பொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட ஒழுங்கமைப்புடன் தொடர்புடைய எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடத்தும் நோக்கத்துக்காக இதற்குமுன்னர் உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும் :* முன்னுரை.

*அத்துடன், சொல்லப்பட்ட ஒழுங்கமைப்பானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

***1.*** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

***2.*** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப் பின்னர் "ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தற்போது தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பில் உறுப்பினர்களாக உள்ளவர்களான அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் "தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பு" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்பட தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பைக் கூட்டிணைத்தல்.

2-PL 005027 -980 (2010/07)

லாம், அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கையிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் பறங்கிய இளைஞர்கள் மத்தியில் சமாதானத்தையும் சுமுகமான வாழ்வையும் மேம்படுத்தலும் மற்றும் இலங்கை மக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வு, தேசிய உணர்வுடன்கூடிய மனோபாவம், நல்லெண்ணம் மற்றும் நட்புறவு என்பவைகளையும் பேணி வளர்த்தலும் மேம்பாடடையச் செய்தலும் ;

(ஆ) அரச பரீட்சைகளுக்கு ஆயத்தம்செய்யும் மாணவர்களுக்கு விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் கல்விச் சுற்றுலா என்பவற்றை நடத்துவதன்மூலம் உதவுதல் ;

(இ) சமய, கலாசார, சமூக மற்றும் பொருளாதாரம் சார்ந்த செயல்பாடுகள்மூலமாக இலங்கை மக்களின் மத்தியில் சமய நல்லிணக்கப்பாடுகளையும், பரஸ்பர புரிந்துணர்வுகளையும், சமாதான சகவாழ்வையும், ஆன்மீக அபிவிருத்தியையும் மற்றும் நட்புறவுகளையும் மேம்படுத்துதல் ;

(ஈ) வசதிகுறைந்த மாணவர்களுக்கு புத்தகங்கள், உபகரணங்கள் மற்றும் பாடசாலைச் சீருடைகள் என்பவற்றைப் பெற்றுக்கொடுப்பதன்மூலமும் மற்றும் அவர்களின் இரண்டாம்நிலை, மூன்றாம்நிலைக் கல்வியின்போது அவர்களுக்கு புலமைப்பரிசில்கள் பெற்றுக்கொடுப்பதன்மூலமும் உதவுதல் ;

(உ) கிராம மற்றும் மாகாண மட்டங்களில் விளையாட்டு மற்றும் இசைத்துறைகளில் மாணவர்களின் ஆற்றல்களை இனங்கண்டு, அதற்குத் தேவையான உட்கட்டமைப்புகளை அமைத்துக்கொடுப்பதன்மூலம் அவர்களின் ஆற்றல்களை அதிகரிப்பதற்கு அவர்களை ஊக்கப்படுத்துதல் ;

(ஊ) பாடசாலையிலிருந்து வெளியேறிய இளைஞர்களுக்குப் பொருத்தமான வேலைத்திட்டங்களை இனங்காணுதலும் மற்றும் எதிர்காலத்தில் போட்டி நிறைந்த தொழில் சந்தையின் தேவைகளுக்கு ஏற்றவாறு அத்தகைய இளைஞர்களைப் பயிற்றுவிக்கும் நோக்கத்துடன் அத்தகைய கருத்திட்டங்களை நிறைவேற்ற அவர்களுக்கு உதவியளித்தலும் ;

(எ) இளைஞர்கள் தங்களின் சுயதேர்ச்சியினையும், திறமைகளையும் விருத்திசெய்து அவர்கள் சுய தொழில்களை மேற்கொள்ள அவர்களை இயலுமானவர்களாக்குவதற்கான நிதி மற்றும் வேறுவகைகளில் அவர்களுக்கு உதவுதல் ;

(ஏ) விசேட ஆற்றல்நிறைந்த இளைஞர்களுக்கு அவர்களுக்கே உரித்தான ஆளுமைகளை விருத்திசெய்வதற்கு உதவிசெய்தல் ;

(ஐ) புகையிலை, மது மற்றும் போதைப்பொருள் என்பன வற்றிலிருந்து விடுதலைபெற்ற சமுதாயமொன்றை ஊக்குவிப்பதற்காகவும் மற்றும் ஒழுக்கமான, தேசாபிமானமுள்ள, கருணையுள்ள மற்றும் ஆரோக்கியமான தலைமுறையை கட்டியெழுப்புவதற்காகவும் இளைஞர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் ;

(ஒ) நீர், வீடமைப்பு மற்றும் வீதி வசதிகள்போன்ற உட்கட்டமைப்பு வசதிகளில் குறைபாடுகள் காரணமாக இளைஞர்களால் முகம்கொடுக்கப்படும் பிரச்சினைகளைப் பற்றி இலங்கையின் பல்வேறு பாகங்களிலிருக்கும் இளைஞர்களுடன் கலந்துரையாடுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும் மற்றும் அத்தகைய வசதிகுறைந்த இளைஞர்களுக்கு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தலும் ;

(ஓ) உட்கட்டமைப்பு வசதிகளிலுள்ள குறைபாடுகளுக்கான தீர்வுகளைக் கண்டறிவதற்காக இளைஞர்களுக்கான நடமாடும் தன்னார்வ செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல் ;

(ஔ) பின்தங்கிய மற்றும் கிராம இடப்பரப்புக்களில் உள்ள இளைஞர்களின் சுகாதாரத் தேவைகளை இனங்கண்டு அவ்வாறான பகுதிகளில் வைத்திய முகாம்கள் மற்றும் சிகிச்சை நிலையங்களை நடாத்தி அத்தகைய முகாம்கள் மற்றும் சிகிச்சை நிலையங்கள் ஊடாக வசதிகுறைந்த இளைஞர்களுக்கு மருந்துகளைப் பெற்றுக்கொடுத்தலும் ;

(க) இலங்கைக்கும் மற்றைய நாடுகளுக்கிடையேயும் நட்புறவு மற்றும் புரிந்துணர்வு என்பனவற்றை கட்டியெழுப்பும் நோக்கத்துடன் அவ்வாறான குறிக்கோள்களைக் கொண்டிருக்கும் ஏனைய சர்வதேச ஒழுங்கமைப்புக்களோடு இளைஞர் பேராளர்கள் பரிமாற்றத்திற்கு வசதியளித்தல் ; அத்துடன்

(ங) இலங்கையில் தேசிய நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை மேம்படுத்துவதற்காக இந்த ஒழுங்கமைப்பின்கீழ் சகல இலங்கை இளைஞர்களையும் ஒன்றிணைத்து ஐக்கியப்படுத்துதல்.

*கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.*

**4**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டங்களுக்கும் அமைவாக கூட்டுத்தாபனம் பின்வருவனவற்றிற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) வங்கிக் கணக்குகளை திறத்தல்,செயற்படுத்தல் மற்றும் முடிவுக்குக் கொண்டுவருதல் ;

(ஆ) பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப் பொறுப்பின்றியோ பணத்தைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் ஏற்றுக் கொள்ளுதல் அல்லது சேகரித்தல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாக தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைக் குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வகையில் முதலீடுசெய்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப் படக்கூடியவாறானதும் அந்நோக்கங்களுக்காக சட்ட ரீதியாககொள்ளப்படக்கூடியதுமான ஏதேனும் அசை வுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை கொள்வனவு செய்வதற்கும் கொள்வதற்கும் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கவும், விற்கவும் அல்லது வேறு வகையில் பெறவும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக் கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமான தெனக் கருதக்கூடியவாறாக அதனைக் கையாளவும் அல்லது கையுதிர்க்கவும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்குத் தேவையான ஊழியர்களை நியமனஞ் செய்யவும், தொழிலுக்கமர்த்தவும் மற்றும் அவர் களைத் தொழிலிலிருந்து அகற்றவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய ஊதியங்களை அவர்களுக்குச் செலுத்தவும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை எய்துவதற்கு அல்லது அதன் தத்துவங்களை பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது கூட்டுத்தாபனத்தின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது முகவர் ஊடாகவோ செய்யவும், புரியவும் அல்லது நிறைவேற்றவும் ; அத்துடன்

(எ) முகாமைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறாக கூட்டுத்தாபனத்தின் எவையேனும் பணிகளை நிறைவேற்ற அவசியம் ஏற்படும்போதும் மற்றும் அவசியமாகின்றவாறும் மதியுரைச்சபைகள், குழுக்கள் அல்லது உபகுழுக்களை நியமிக்கவும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமை, கட்டுப்பாடு, நிருவாகம் என்பன இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக ஐந்து பேருக்கு குறையாத உறுப்பினர்களைக்கொண்ட முகாமைக்குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) முகாமைக் குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் வெற்றிடமொன்று உள்ளமை காரணமாக அல்லது அதன் உறுப்பினரொருவரை தேர்ந்தெடுப்பதில் அல்லது உறுப்பினர் பெயா் குறித்து நியமனம் செய்வதில் ஏற்பட்ட ஏதேனும் தவறு காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாகக் கருதப்படலாகாது.

(3) முதலாவது முகாமைக்குழு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற முகாமைக்குழுவின் உறுப்பினர்களைக் கொண்டு இருத்தல் வேண்டுமென்பதுடன், அம்முகாமைக்குழுவானது, இச்சட்டத்தின் 6 ஆம் விதியின்கீழ் புதிய புது முகாமைக்குழுவொன்று தெரிவுசெய்யப்படும் வரை தொடர்ந்து பதவிவகித்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு, பின்வரும் எல்லாக் கருமங்களுக்காக அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றிற்காக, இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்துதல், உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களை தேர்ந்தெடுத்தல், அவர்கள் பதவியிலிருந்து விலகுதல், அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் உறுப்பினர்களின் தத்துவங்கள், நடத்தை மற்றும் கடமைகள் ;

(இ) முகாமைக்குழுவின் உறுப்பினர்களைத் தெரிவு செய்தலும், அக்குழுவின் கடமைகள், தத்துவங்கள் நடத்தை, கடமைகள் மற்றும் முகாமைக்குழு உறுப் பினர்களின் பதவிக்காலம் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள் மற் றும் சேவையாளர்களினது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(உ) முகாமைக்குழுவின் கூட்டங்களை கூட்டும்போதும் நடாத்தும்போதும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் மற்றும் அத்தகைய கூட்டங்கள் பற்றிய நேரங்கள், இடங்கள், அறிவித்தல்கள், நிகழ்ச்சி நிரல், அவற்றின் கூட்ட நடப்பெண் மற்றும் அவற்றில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களின் நிருவாகமும் முகாமைத்துவமும், அதன் நிதியின் கட்டுக்காப்பும், அதன் கணக்குகளின் பராமரிப்பும் மற்றும் கணக்காய்வும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய் தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட எவ்விதியும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதுபோன்று அதே போன்ற கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் திருத்தப் படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் இடாப்பு.*

**7**. முகாமைக்குழுவின் செயலாளர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் பெயர்களை அடங்கிய இடாப்பொன்றை வைத்துப் பேணுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**8**. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, அளிப்பு, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்றவாறு அல்லது வேறேதேனும் வகையாக அதற்கு உரித்தாக்கப்படக் கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை கொள்வதற்கும், வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாகவும், ஆற்றலுடையதாகவும் இருத்தல் வேண்டும். என்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க அல்லது கொடுத்து மாற்றவுள்ள முழுத் தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் மற்றும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கமைவாகவும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9**. (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண் டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடைகள் மூலமாக அல்லது, விருப்பாவணக்கொடைகள் அல்லது மானியக்கொடைகள் நன்கொடை, உதவுதொகை அல்லது கட்டணங்கள் என்ற வகையாகக் கிடைக்கப்பெற்ற எல்லாப் பணங்களும் முகாமைக்குழு தீர்மானிக்கின்றவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் நிதியத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் ஆதனங்களைப் புனருத்தாபனம் செய்யும் அபிவிருத்தி செய்யும் அல்லது மேம் படுத்தும் நோக்கத்திற்காக தேய்மான நிதியமொன்றை அல்லது கடனாழ் நிதியமொன்றைத் தாபிக்கலாம்.

(3) கூட்டுத்தாபனம் அதன் தத்துவம் கடமை மற்றும் பணி களை பிரயோகித்தலில், புரிதலில், நிறைவேற்றலில் கூட்டுத்தாப னத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவை கொடுத்துத்தீர்ப்பதற் கான பணத்தொகைகள் யாவும் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

**10**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று ஒழுங்கமைப்பிற்குரிய எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத்தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று ஒழுங்கமைப்பிற்கு வருமதியாகவுள்ள தனிசுகள், ஒழுங்கமைப்பிற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*ஒழுங்கமைப்பால் செலுத்தப்பட உள்ளனவும் மற்றும் அதற்குச் செலுத்தப்படற்பாலதுமான தனிசுகள்.*

**11**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களை அல்லது பொறுப்புக்களை தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்திற்காக அவரிடமிருந்து வருமதியாக இருக்கக்கூடிய அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத்தை விஞ்சுகின்ற ஏதேனும் மேலதிக உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்படல்.*

**12**. (1) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.*

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(i) இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் எனப் பொருளாகும்; அல்லது

(ii) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன் றைக் கொண்டவராகவும் இருக்கின்றதோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று, எனப் பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாப னத்தின் தலைவர் மற்றும் செயலாளர் அல்லது முகாமைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான கூட்டுத்தாபனத்தின் வேறு இரு அங்கத்தவர்களின் முன்னிலையிலன்றி எச்சாசனத்திலும் பொறிக்கப்படலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமளித்த மைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டும். அத்தகைய கையொப்ப மிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதி னின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கலைக்கப்பட்டதன் மேல் எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புகளையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது ; ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்நதளித்தல் தடைசெய்யப்பட்டதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளவையுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் முகாமைக்குழு உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**15**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

**16**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*